உ

மதுரை மீனாட்சியம்மன்

திருவாய்மலர்ந்தருளிய.

கிளிப்பாடல்.

சென்னை:—ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1922.

77

உ

கணபதி துணை.

கிளிப்பாடல்.

ஆதிசிதம்பரத்தே கிளியே
ஆடிவணங்கிக்கொண்டு
சோதியிலக்கிணத்தை கிளியே
சொல்லுகிறேனுனக்கு
ஆதிமத்யாந்தமில்லை கிளியே
ஆனந்தரூபமடி
சோதியிலேயிருந்து கிளியே
சுத்தவெளிப்பிறந்து
வாய்வுமக்கினியும் கிளியே
வந்து அப்புமண்ணு
பேயுஞ்சராசரமும் கிளியே
யெல்லாமுலகமுமே
பேயாமுலகத்திலே கிளியே
பேதம்பிறந்ததடி
தாயுமலடியடி கிளியே
தன்னை மறந்தாண்டி
ஐந்துபூதமடி கிளியே

வஞ்சனையாலேயன்னே கிளியே
வல்துவைமறைத்ததடி
கொஞ்சமல்லவடி கிளியே
கோரனையெத்தனையோ
கஞ்சையுண்ணுதே கிளியே
நரகமாகுமடி
ஐஞ்சையும்வேண்டாதே கிளியே
அஞ்சுவளருமடி
நெஞ்சையடிக்கடியோ கிளியே
நேமங்களேதுக்கடி
தேகத்தைநம்பிஅன்னே கிளியே
ஜெனனம்வந்ததடி
மோகத்தைதள்ளடியோ கிளியே
முத்திகிடைக்குமடி
காமமேதுக்கடி கிளியே
கன்மவினைகளன்னே
கேமமில்லாமல் கிளியே
நிச்சயமானதடி
சமயம்வேணுமடி கிளியே
சாதனமற்றதினல்
சமயமற்றவடங் கிளியே
சற்குருபாதமடி
தீர்த்தமாடுவதுங் கிளியே
தேவதைபூசைகளும்

எத்தநிஷ்டைகளும் கிளியே
யெவ்வெவ்விரதங்களும்
ஆலயந்தேடுவதுங் கிளியே
ஆசாரங்கூடுவதுங்கிளியே
சாலமனந்தெளியுங் கிளியே
சற்குருசேவைகளும்
செபதபங்கள்வேணுமடி கிளியே
ஸ்ரீகுருசேவைகளாந்
தபசுவந்ததற்கு கிளியே
தன்மயமாகுமடி
நித்தியாநித்தங்கள் கிளியே
நினைவுமுற்றவர்க்கு
பத்திவிளங்குமடி கிளியே
பாசமொழியுமடி
அனித்தியந்தேகநுமலை கிளியே
யாறறிவார்களின்
முனிச்சனங்களுக்குங் கிளியே
மோகமொழியவில்லை
தன்னையறியவேணுங் கிளியே
சஞ்சலந்தீரவேணும்
என்னபடித்தாலுங் கிளியே
இருவினைபோகவில்லை
காயத்தைநம்பாதே கிளியே
கற்பிதமர்குமடி

ஆயன்குருபதத்தை கிளியே
ஆராயவேணுமடி

மாயமலடியடி கிளியே
மக்களுமில்லையடி

மாயத்தையென்னசொல்வேன் கிளியே
மௌனநல்லதடி

அறிவுகெட்டவற்கு கிளியே
ஆசாரஞ்சொன்னபடி

அறிவறிந்தவற்கு கிளியே
ஆசாரமேதுக்கடி

சரிகைகிரியைமுதல் கிளியே
சாலோகமாகிவரும்

திரிபுரம்நாசமடி கிளியே
சின்மயங்கண்டவிடம்

மனமடங்காமல் கிளியே
மயங்கந்தீராமல்

அனர்த்தமாகுதடி கிளியே
ஆசைவசமானால்

அடக்கவேணுமடி கிளியே
ஆகாக்கருவிகளே

முடக்கவேணுமடி கிளியே
மோட்சமாகுமடி

உற்றுப்பாராமல் கிளியே
உலகந்தோணுதடி

கிளிப்பாடல்.

உற்றுப்பாரடியே கிளியே
உன்மயமாகுதடி

சாதிகுணங்களில்லை கிளியே
சமயமில்லையடி

ஊதிப்பாரடியோ கிளியே
உன்னுக்குள்ளேவெளியாம்

வேதம்படித்தாலும் கிளியே
வெளியாகமாட்டாதடி

போதமறிந்தவற்கு கிளியே
போக்குவரத்தெரியும்

கர்மயோகங்களுங் கிளியே
கர்ப்புதமாகுடி

மர்மமறியாமல் கிளியே
வந்தது அப்புமண்ணு

பிறவிபொய்யடியோ கிளியே
போதமறிந்தவற்கு

குறைகளில்லையடி கிளியே
குருபாதங்கண்டவர்க்கு

தலங்களேதுக்கடி கிளியே
தத்துவமுற்றவர்க்கு

புலங்களற்றதடி கிளியே
பூரணங்கண்டவர்க்கு

ஆலயந்தேடுமெடி கிளியே
ஆலயஞ்சுற்றவேண்டாம்

ஆலயமானதுபோல் கிளியே
ஆத்மாவைப்பாரடியோ
அத்தையறியாமல் கிளியே
அலைவதேயுலகம்
வித்தையிதுவடியோ கிளியே
வேகாத்தலையிதுவே
கண்டவருண்டானால் கிளியே
கண்டுவவர்பாதம்
தொண்டுபண்ணடியோ கிளியே
தோஷங்கள்தீருமடி
சொல்லலாகாதே கிளியே
சொல்லவும்வேணுமடி
பொல்லாருடனுரைததால் கிளியே
பொல்லாப்புவந்துவிடும்
ஓடுமனத்தோங்கு கிளியே
யுபதேசமேதுக்கடி
வீடுவெளியாமோ கிளியே
மெய்யாகவேண்டாமோ
கலகமுண்டானால் கிளியே
காலனுமுண்டடியோ
நிலைக்கவேணுமடி கிளியே
நித்யசுரூபத்திலே
பத்தியுண்டானால் கிளியே
பார்வையுரைக்குமடி

வத்துவிளங்குமடி கிளியே
வாராதுசென்மவினை
மனம்வெறுத்தவற்கு கிளியே
வையகம்பாழடியோ
கனவுகண்டதுபோல் கிளியே
காயமுமப்படியே
ஞானியில்லையடி கிளியே
நான்முறையில்லையடி
தானுமில்லையடி கிளியே
தன்மயங்கண்டவிடம்
வித்தாரமேதுக்கடி கிளியே
விசுவாசமேதுக்கடி
சுத்தநிலைகிடைத்தால் கிளியே
சுகானந்தமுண்டாமடி
பிரமமேதுக்கடி கிளியே
பின்னையொன்றுமில்லை
பிரமஞ்சிதம்பரமே கிளியே
பேறானமுத்தியடி
மதுரைமீனாட்சியம்மாள் கிளியே
மகிழ்ந்துரைத்ததமிழ்
இதமாய்படிப்போர்க்கு கிளியே
யெல்லாச்சுகந்தருமே.

கிளிப்பாடல்-முற்றிற்று,